[பேரவைத் தலைவர்] [2023 மார்ச் 23

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

திரு. ப. தங்கவேலு அவர்கள் 1980–1984 ஆம் ஆண்டுகளில் ஜெயங்கொண்டம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

திரு. சி.நா.மீ. உபயதுல்லா அவர்கள் 1989–1991, 1996–2001, 2001–2006 மற்றும் 2006–2011 ஆகிய ஆண்டுகளில் தஞ்சாவூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றினார்கள். மேலும், 2006–2011 ஆம் ஆண்டுகளில் அமைச்சராகவும் சிறப்புற பணியாற்றியுள்ளார்கள்.

திரு. கு. சீனிவாசன் அவர்கள் 1991–1996 ஆம் ஆண்டுகளில் மன்னார்குடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானம்

பிரபல பின்னணிப் பாடகி திருமதி வாணி ஜெயராம் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கல் தீர்மானம். பிரபல பின்னணிப் பாடகி திருமதி வாணி ஜெயராம் அவர்கள் மறைவு குறித்து.

2023 மார்ச் 23] [பேரவைத் தலைவர்]

இந்திய திரையுலகின் புகழ்பெற்ற பின்னணிப் பாடகி திருமதி வாணி ஜெயராம் அவர்கள் 4-2-2023 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

வேலூர் மாவட்டத்தில் பிறந்து, தமது இனிமையான குரலாலும், இசை வல்லமையாலும் உலகம் முழுக்க புகழ்பெற்ற திருமதி வாணி ஜெயராம் அவர்கள் பல்வேறு மொழிகளில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடி இரசிகர்கள் மனதில் நீங்கா இடம்பெற்றவர். மாநில விருதுகளையும் தேசிய விருதுகளையும் பெற்றதோடு, இந்த ஆண்டின் பத்மபூஷண் விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பெருமைக்குரியவர்.

அன்னாரது மறைவால் அவரை இழந்துவாடும் அவரது குடும்பத்தினருக்கும், இசை இரசிகர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

3. தகவல் கோரல்

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், கிட்டம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. ஜெகன் உயிரிழந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், கொஞ்சம் இருங்கள்; உங்களுக்கு பிறகு பேச வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுங்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.